இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

அத்திமரத்திலிருந்து ஓர் உண்மையைக் கற்றுக் கொள்ளுங்கள். அதன் கிளைகள் தளிர்த்து இலைகள் தோன்றும்போது கோடைக் காலம் நெருங்கி வந்துவிட்டது என நீங்கள் அறிந்துகொள்கிறீர்கள். அவ்வாறே இவை நிகழ்வதைக் காணும்போது மானிடமகன் கதவை நெருங்கி வந்துவிட்டார் என்பதை நீங்கள் அறிந்துகொள்ளுங்கள். இவையனைத்தும் நிகழும்வரை இத்தலைமுறை ஒழிந்து போகாது என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். விண்ணும் மண்ணும் ஒழிந்துபோகும்; ஆனால் என் வார்த்தைகள் ஒழியவேமாட்டா. (மாற்கு 13:28-31)

# ஏழைகளுக்கான நற்செய்தி துணிவுள்ள சான்றாக இருக்க வேண்டும்

## திருத்தந்தை வலியுறுத்து

அக்டோபர் 25 வெள்ளிக்கிழமை மாலை உரோம் இலாத்தரன் பேராலயத்தில் உரோம் மறைமாவட்ட அருள்பணியாளர்களைச் சந்தித்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஏழைகளுக்கு நற்செய்தியை கொண்டு செல்லுதல், சிதைந்ததை சீர்படுத்துதல், எதிர்நோக்கை விதைத்தல் என்னும் மூன்று தலைப்புகளில் கீழ் தனது கருத்துக்களை அவர்களுக்கு எடுத்துரைத்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.



இலாத்தரன் பெருங்கோவிலில் திருத்தந்தை பிரான்சிஸ்

முதலில், ஏழைகளுக்கு நற்செய்தியைக் கொண்டு செல்ல வேண்டும். ஏழைகள் எப்போதும் நம்முடன் இருக்கின்றார்கள், ஏழைகள் கிறிஸ்துவின் உடலாகவும் திருவருளடையாளமாகவும் அவரை நம் கண்களுக்குப் புலப்படுகிறார்கள் என்று எடுத்துரைத்த திருத்தந்தை அவர்கள், தெருவோர எளியோர்க்கு பணம் கொடுத்து உதவும்போது அவர்களின் கண்களைப் பார்த்து உதவ வேண்டும், மாறாக பணத்தை தூக்கி எறிந்து நடப்பது என்பது அவர்களில் வாழும் கடவுளை உதாசீனப் படுத்துவது என்றும் கூறினார்.

ஏழ்மையைத் தீர்க்கின்ற ஒரு மாய மந்திரத்தை இயேசு நமக்கு வழங்கவில்லை மாறாக அவர்களிடத்திலும் "நற்செய்தியை" கொண்டு செல்லும்படிக் கேட்கிறார் என்றும், இறைவனால் அன்பு செய்யப் படுவர்கள், கடவுளின் பார்வையில் விலைமதிப்பற்றவர்களாக கருதப்படும் ஏழை எளியோரின் மாண்பு உலகத்தாரால் நசுக்கப்படுகின்றது என்று எடுத்துரைத்த திருத்தந்தை, ஏழைகள் எண்களாக, பிரச்சனைகளாகவோ, நிராகரிக்கப்படுபவர்களாகவோ கருதப்படக்கூடாது என்றும், நமது உடலாக இருக்கும் உடன் சகோதரர்கள் போன்று கருதப்பட வேண்டும் என்றும் வலியுறுத்திய திருத்தந்தை அவர்கள் உரோம் மறைமாவட்ட அருள்பணியாளர்கள் பலர் ஏழை எளியோர்க்கு பணியாற்றுவதற்காக தங்கள் நேரத்தை பயன்படுத்துவது குறித்து வாழ்த்து தெரிவித்தார்.

பெரும் சமூகக் கட்டமைப்பு, சமத்துவமின்மை காரணமாக, அன்றாடம் உணவுப் பொருள்கள் வீணாகின்றன, பல ஆடம்பர உணாவு விடுதிகளில் எண்ணற்ற உணவுப்பொருள்கள் கொட்டப்படுகின்றன என்று சுட்டிக்காட்டிய திருத்தந்தை அவர்கள், உண்ண உணவின்றி ஆயிரக் கணக்கான ஏழைகள் நடைபாதைகளில் உறங்குவதை நாம் காண்கின்றோம் என்றும் எடுத்துரைத்தார்.

பணக்காரரர்கள் நோய்வாய்ப்பட்டால் அவர்களது தேவைகள் அனைத்தும் முழுமையாக பூர்த்தி செய்யப்படும் இவ்வுலகில், ஏழைகள் நோய்வாய்ப்பட்டால் அவர்கள் மாண்புடன் நடத்தப்படுவதில்லை என்று சுட்டிக்காட்டிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இத்தகைய முரண்பாடுகள் மற்றும் ஏற்றத் தாழ்வுகளால் நாம் வாழ்கின்ற இந்த உலகம் சிதைந்துள்ளது என்றும் திருத்தந்தை பிரான்சிஸ் எடுத்துரைத்துள்ளார்.

சமூகப் பிரச்சினைகளின் பன்முகத்தன்மையானது நம்மால் ஒன்றும் செய்ய முடியாது என்று சொல்லும் அளவிற்கு நம்மை கொண்டு செல்லலாம். ஆனால் கிறிஸ்தவ நம்பிக்கை என்பது எப்போதும் செயல் பாட்டில் இருப்பது. ஏனென்றால் வரலாற்றை வழிநடத்துவது இறைவன் தான் என்ற உறுதியால் அது உயிரூட்டப்படுகிறது, மனிதனால் சாத்தியமற்றது என்று தோன்றுவதை அவரில் உருவாக்குகின்றது என்றும் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

எதிர்நோக்கு ஒருபோதும் ஏமாற்றம் தராது! எதிர்நோக்கின் பாதையில் செல்வோம் என்றும், ஒரு நல்ல விதையை விதைக்க வேண்டியதன் அவசியத்திற்கு பதிலளிக்கும் பணியில் ஈடுபடும் பல மக்கள், அந்த சிறிய விதையானது பெரிய மரமாக மாறும் வரை வேறு யாராவது பார்த்துக் கொள்வார்கள் என்ற நம்பிக்கையில் செயல்முறைகளை செயல்படுத்துவதைப் பின்பற்றுகின்றார்கள் என்றும் வலியுறுத்தினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

***மெரினா ராஜ் - வத்திக்கான்***

# பினாங்கு, பெர்மாத்தாங் திங்கியில் புதிய ஆலயம் திறப்பு விழா கண்டது

கடந்த அக்டோபர் 31, வியாழன் அன்று காலை 9.30க்கு பெர்மாத்தாங் திங்கி புனித மரியாவின் தூய பெயர் பங்கு அதன் வரலாற்று மிக்க புதிய தேவாலயத்தின் திறப்பு விழா மற்றும் அர்ப்பணிப்பு திருப்பலியைக் கொண்டாடி மகிழ்ந்தது.

நான்கு ஆண்டுகளுக்கு முன் பணி ஓய்வு பெற்ற முன்னாள் பங்குத்தந்தை அகஸ்தின் வோங் அவர்களால் தொடங்கப்பட்ட இத்திட்டம் இன்றையப் பங்குத்தந்தை லூயிஸ் லோய் அவர்களால் வெற்றிகரமாக கட்டி முடிக்கப்பட்டது. இத்திறப்பு மற்றும் அர்ப்பணிப்பு திருப்பலி பினாங்கு மறை மாவட்ட ஆயர் கர்தினால் செபஸ்தியன் பிரான்சிஸ் அவர்களால் நிறைவேற்றப் பட்டது.

அன்று இக்கொண்டாடத்தில் ஏறக்குறைய 2500 இறைமக்கள் உள்ளூர் மற்றும் அருகாமையிலுள்ள பங்குகளிலிருந்து திரண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. 96 ஆண்டு கால நம்பிக்கையைத் தாங்கி நிற்கும் பழைய தேவாலயத்தின் வலப்புறத்தில் மலர்ந்துள்ள இப்புதிய தேவாலயம், அடுத்து வரும் தலைமுறையினரின் நம்பிக்கை ஒளியாகத் திகழும் என்பது திண்ணம்.

கடந்த 2022-ஆம் ஆண்டு, மே மாதம் 3-ம் திகதி ஆயர் செபஸ்தியன் பிரான்சிஸ் அவர்கள், அடிகல் நாட்டி இப்புதிய ஆலயத்திற்கான கட்டுமானப் பணியைத் துவக்கிவைத்தார். 1200 பேர் அமரக்கூடிய வசதியைக் கொண்ட இத்தேவாலயத்தின் கட்டுமானத் தொகை RM 8 மில்லியன் ஆகும் என்று அன்று கணக்கிடப்பட்டது.

அன்னை மரியின் தூயப் பெயரில் இங்கு முதல் ஆலயம் 1893 இல் அருள்பணி Pierre Bouheret MEP அவர்களால் நிறுவப் பட்டது. பின்னர் 1928 ஆம் ஆண்டு அன்றைய உள்ளூர் அருள்பணியாளர் மைக்கேல் சீட் அவர்கள் இன்று வரை பயன்பாட்டில் இருந்த தேவாலயத்தைக் கட்டினார். அத்தேவாலயம் இன்று அதே வளாகத்தில் மற்றொரு புதிய தேவாலயமாக எழுந்திருப்பதைக் கண்டு இப்பகுதி இறைமக்கள் கடவுளுக்கு நன்றி கூறியதோடு பூரிப்படைந்தனர்.



-ரோஜர் பிரிமுஸ்.

# ஈப்போ, லூர்து அன்னை பங்கில் நலமிகுச் சமூகத்திற்கு விளையாட்டுகள்

ஈப்போ: 2024 ஆம் ஆண்டிற்காக, இங்கு சிலிபின் சாலையில் உள்ள லூர்து அன்னை பங்கின் (OLOL) விளையாட்டு பணிக்குழு "நலமிகு உடல், நலமிகு மனம்" என்ற புற நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக டாட்ஜ்பால் (dodgeball) எனும் விளையாட்டை ஏற்பாடு செய்தது.



கருப்பொருளை ஏற்று விளையாட்டு துறையில் பங்கு மக்களிடையே சமூகப் பிணைப்புகளை வலுப்படுத்தியது மட்டுமல்லாமல், துடிப்பான மற்றும் நெகிழ்ச்சியான உணர்வைத் தக்கவைக்க உடல் நலத்தைக் காப்பது அவசியம் என்பதை நினைவூட்டியது.

கடந்த மே மாதத்தில் கேரம், டார்ட்ஸ் மற்றும் சதுரங்கம் போன்ற உட்புற விளையாட்டுப் போட்டியுடன் தனது விளையாட்டு நடவடிக்கைகளை இப்பணிக் குழு தொடங்கியது. தொடர்ந்து, கடந்த அக்டோபரில் ஃபுட்சல் போட்டியும் நடத்தப்பட்டது. இரண்டு நிகழ்வுகளிலும் பல்வேறு பிரிவுகளில் 100க்கும் அதிகமான பங்கு மக்கள் ஆரவமுடன் பங்கேற்றனர். இந்த வரிசையில் கடந்த ஆகஸ்ட் மாதம், படிவம் 1 முதல் படிவம் 5 வரையிலான மறைக்கல்வி மாணவர்களுக்கான வெளிப் துணைப் பங்குத்தந்தை அருள்பணி ஜோர்ஜ் வைத்தியநாதன் அவர்கள், தொடக்கப் இறைவேண்டலை நிறைவு செய்ய, மே மற்றும் அக்டோபர் மாதங்களுக்கான இரு போட்டிகளையும் அதிகாரப்பூர்வமாக அறிவித்தார். பின்னர் அருள்பணி ஜோர்ஜ் மற்றும் பங்குத் தந்தை ரோபர்ட் டேனியல் இருவரும் கேரம் மற்றும் டார்ட்ஸ் போட்டிகளில் ஆர்வத்துடன் பங்கேற்றனர். நிகழ்வின் நிறைவில் பங்குப்பெற்ற அனைவருக்கும் பங்கேற்புச் சான்றிதழ்கள் வழங்கி வெற்றி பெற்றவர்கள் பதக்கங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

ஒவ்வொரு போட்டியின் முடிவிலும், பங்கேற்பாளர்கள் களைப்புற்றும் மகிழ்ச்சியாகவும் இருந்தனர், மேலும் இது போன்ற விளையாட்டு நிகழ்ச்சிகளில் பங்கேற்க ஆர்வமாக உள்ளதாகக் கருத்துரைத்தனர்.

**‘கடவுள் நம் ஒவ்வொருவரிடமும் நீ எப்படி அன்பு செய்தாய் என்று கேட்பார். எனவே கடவுளை அன்பு செய் அயலாரை அன்பு செய் என்ற அவரது கட்டளை களை நாம் நமது இதயத்தில் நிலை நிறுத்த வேண்டும் அதற்கேற்ப செயல்படவும் வாழவும் வேண்டும்.’**





# திருஅவையில் யூபிலி ஆண்டு 2025 – யூபிலி ஆணைமடல் பகுதி 2

அன்பு இறைமக்களே, திருஅவையில் யூபிலி ஆண்டு 2025ஐ முன்னிட்டு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வெளியிட்ட ஆணைமடலில் உள்ள கருத்துக்களைக் கடந்த இரு வாரங்களுக்கு முன் வாசித்து அறிந்தோம். இன்றைய பகுதியில் அவ்வாணைமடலின் இரண்டாம் பகுதி உணர்த்தும் எதிர்நோக்கின் வார்த்தை என்ற தலைப்பின் கீழ் உள்ளக் கருத்துக்களைக் காண்போம்.

எதிர்நோக்கு ஒருபோதும் ஏமாற்றம் தராது என்ற தலைப்பில் தனது ஆணை மடலினை வெளியிட்ட திருத் தந்தை அவர்கள் திருத்தூதர் பவுலின் வார்த்தைகள், உரோம் நகர மக்கள் மீது அவர் கொண்டிருந்த அன்பு ஆகியவற்றைப் பற்றி கூறுவ தாக எடுத்துரைத்துள்ளார்.

நமது நம்பிக்கையின் மூலம் கடவுளுக்கு ஏற்புடையவர் களாகியுள்ள நாம், நம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் வழியாகக் கடவுளோடு நல்லுறவு கொண்டுள்ளோம். இத்தகைய அருள்நிலையைப் பெற்றிருக்கும் நாம், இந்நிலையை அடையும் உரிமை இயேசு கிறிஸ்துமீது கொண்ட நம்பிக்கையால் அவர் வழியாகவே நமக்குக் கிடைத்தது. எதிர்நோக்கு ஒருபோதும் ஏமாற்றம் தராது. ஏனெனில், நாம் பெற்றுள்ள தூய ஆவியின் வழியாய்க் கடவுளின் அன்பு நம் உள்ளங்களில் பொழியப்பட்டுள்ளது. திருத்தூதர் பவுல் வழங்கும் பல நுண்ணறிவுகள் இவ்வார்த்தைகளில் உள்ளன. உரோமையர்களுக்கு எழுதிய திருமடல் அவருடைய நற்செய்தி நடவடிக்கையில் ஒரு உறுதியான நிலையைக் குறிக்கிறது. அதுவரை பேரரசின் கிழக்குப் பகுதியில் பயணம் மேற்கொண்ட அவருக்காக, இப்போது உரோம் காத்திருக்கிறது என்பது உலகின் பார்வையில் பிரதிபலிக்கிறது.

நற்செய்தி அறிவிப்பு என்ற பெயரில் எதிர்கொள்ள வேண்டிய ஒரு பெரிய சவால், திருத்தூதர் பவுலின் பயணங்கள். தடைகள் அல்லது எல்லைகளை அறிந்துகொள்ள முடியாத ஒரு பயணம். உரோம் திருஅவை திருத்தூதர் பவுலால் உருவாக்கப்படவில்லை. இருப்பினும் அதை விரைவில் அடைய வேண்டும், இறந்த மற்றும் உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை அனைவருக்கும் எடுத்துரைக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டிருந்தார். எதிர்நோக்கின் அறிவிப்பானது வாக்குறுதிகளை நிறைவேற்றும் நம்பிக்கையின் அறிவிப்பாகவும், மாட்சியையும், புகழையும் கொண்டு வருகின்றதாகவும், ஒருபோதும் ஏமாற்றம் தராததாகவும் இருக்க வேண்டும் என்று அவர் விரும்பினார். அன்பினால் நிறுவப்பட்ட திருஅவை அது ஒருபோதும் ஏமாற்றம் தராது என்பதை தனது வார்த்தைகளாலும் செயல்களாலும் எடுத்துரைத்தார் திருத்தூதர் பவுல். ஏனெனில், நாம் பெற்றுள்ள தூய ஆவியின் வழியாய்க் கடவுளின் அன்பு நம் உள்ளங்களில் பொழியப்பட்டுள்ளது என்பதை முழுமையாக அவர் நம்பினார்.

## ஜொகூர், பாலோ சிற்றாலயத்தில் புனித யூதா ததேயு திருவிழா

ஜொகூர், பாலோ சிற்றாலயத்தில், புனித யூதா ததேயு திருவிழா கடந்த 26.10.24 அன்று மாலை மணி 6.00க்கு திருப்பலி, திருபவணியுடன் ஆண்டு திருவிழா சிறப்பாகக் கொண்டாடப் பட்டது. இவ்வாண்டு இத்திருவிழாவிற்கு குளுவாங், உலு ரெமிஸ், ஸ்கூடாய் போன்ற பங்குகளிலிருந்து ஏறக்குறைய தொண்ணூறு நம்பிக்கையாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

அன்று திருப்பலியைக் கொண்டாடிய அருள்பணி வில்லியம் அவர்கள் அவரது மறையுரையில், பார்வையற்றவைரப்போல தாவீதின் மகனே, எனக்கு இரங்கும்” என உரக்க வேண்டினார், பார்வைப்



பெற்றார், அவரைப் போலவே நாமும் இயேசுவைப் பற்றிக்கொள்ள வேண்டும். அவரின் இரக்கம் பெற்றால் நலம் பெறுவோம் என்றார்.

ஆ.வி.டேவிட். குளுவாங்.

# கூட்டிச் சேர்க்கும் ஆண்டவரில் கூடுவோம்!

இன்று நாம் ஆண்டின் பொதுக்காலத்தின் நிறைவில் இருக்கின்றோம். பொதுக்காலத்தின் 33-ஆம் ஞாயிறு வாசக சிந்தனைகளோடு தொடங்கும் இவ்வேளையில் விழிப்போடும், எச்சரிக்கையோடும் செயல்பட நம்மை அழைக்கிறது. பொதுக் காலத்தின் இறுதி ஞாயிறான இன்று உலகின் இறுதி குறித்தும் மானிட மகனின் வருகை குறித்தும் நாம் விழிப்பாய் இருக்க அழைப்பு விடுக்கப்படுகிறது.

முதல் வாசகத்தில் இருண்டு விடும், நிலா ஒளி கொடாது, விண்மீன்கள் வானத்திலிருந்து விழும், என்று அச்சத்தைத் தருபவையாகக் கூறப்படுகின்றன. ஆனால் இறுதியில் மானிட மகன் மேகங்களின் மீது வருவார் என்ற மகிழ்ச்சி செய்தியும் தரப்படுகின்றது. இந்த இயற்கை நிகழ்வுகளை உற்றுப் பார்த்து அதன் அடையாளங்களின் பொருளை நாம் கற்றுக்கொள்ள வேண்டும். உலக முடிவுப் பற்றி விண்ணகத்திலுள்ள தூதருக்கோ, மகனுக்கோக் கூடத் தெரியாது என்கிறார் இயேசு. எனவே, அது குறித்த அச்சம் அர்த்தமற்றதாகும்.

இன்றைய நற்செய்தியும் முதல் வாசகமும் குழப்பம், வேதனை, இறப்பு பற்றி சொல்லும் மொழிநடை நம்மை அச்சுறுத்துவது போல் தெரிகிறது, ஆனால் வான்வெளிக்கோல்கள் மற்றும் பிரபஞ்சத்தில் ஏற்படும் அச்சுறுத்தும் மாற்றங்களுக்கு மத்தியில் இடர்படும் இயேசுவின் உடனிருப்பு நமக்கு நம்பிக்கையூட்டுகிறது. எதிர்மறையான அழிவுக்குறிய எண்ணங்களுக்கு இடம் கொடுத்து நாம் பழகிவிட்டோம். அது பழைய இயல்புக் குரியது. ஆனால் புதிய இயல்பை அணிந்து கொள்ளும் நாம் இதிலிருந்து கற்றுக் கொள்ள வேண்டிய உண்மையை இயேசு நமக்கு உணர்த்துகிறார்.
கிறிஸ்துவில் நாம் கொள்ளும் நம்பிக்கை நம்மை நிறைவுள்ளவராக்குகிறது. நம் நம்பிக்கை வாழ்வில் நாம் சந்திக்கும் தடைகளைத் தந்தையின் வலப்புறம் வீற்றிருக்கும் கிறிஸ்து அகற்றிப் போடுகிறார். அதுமட்டுமல்ல அவரை எப்பொழுதும் கண்முன் கொண்டு நம் இதயம் அவரில் அக்களித்து அவரது வார்த்தையில் தோய்ந்து நின்று குழப்பங்கள், வேதனைகள், இறப்பு இவற்றிற்கு மத்தியில் நாம் செல்லும் பொழுது இயேசு நம் கதவண்டை நின்று தட்டி எழுப்பக் திறக்கக் காத்துக் கொண்டிருப்பார் (திருவெளி3:20). தம் அன்பரை அவர் படுகுழியைக் காண விட மாட்டார். வாழ்வின் வழியை அறியச் செய்து அவர் முன்னிலையில் நிறைவான மகிழ்ச்சிக் காண வைப்பார் (திபா 16:10,11). இயேசு தம்மையேப் பலியாக்கியதன் மூலம் நம் அனைவரையும் கடவுளுக்கேற்றப் பிள்ளைகளாகவும், நிறைவுள்ளவர்களாகவும், தூயவர்களாகவும் மாற்றினார்.

ஆகவே, நம்பிக்கை கண்களால், நம்மைச் சுற்றியுள்ள அடையாளங்களைக் காண நாம் அழைக்கப்படுகிறோம். ஆம், நாம் சவாலான காலங்களை எதிர்கொள்கிறோம், ஆனால் இறுதி வெற்றி இயேசுவின் ஒருமுறை தியாகத்தால் உறுதி செய்யப்பட்டுள்ளது என்பதை நினைவில் நிறுத்தி, அச்சமின்றி இம்மையில் வாழ்வோம்.

M.-சவரிநாதன், சுங்கை பட்டாணி.

### பொதுக்காலம்-33-ஆம் ஞாயிறு

| | |
|---|---|
| முதல் வாசகம்: | தானி 12:1-3 |
| திரு.பாடல் | 16: 5,8. 9-10. 11 |
| 2-ம் வாசகம் | எபி. 10: 11- |
| 14,18நற்செய்தி | மாற்கு 13: 24-32 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 2 (B)**
**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 2**
**திருப்புகழ் மாலை- வாரம் 1**